# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்
சென்னை - 600 025.



BHARATHIDASAN UNIVERSITY, TIRUCHIRAPPALLI
24 DEC
OFFICE OF THE REGISTRAR
36122



**உ. சகாயம்,** இ.ஆ.ப.,
துணைத்தலைவர்


ந. க. எண்: 1005 / அறிவியல் நகரம் / மு. அ. அ. (1) / சென்னை அறிவியல் விழா 2019 நாள்: 21.12.2018

பெறுநர்

பதிவாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 620 024.

அய்யா / அம்மையீர்,

பொருள்: அறிவியல் நகரம், சென்னை – 25 – சென்னை அறிவியல் விழா 2019 – அறிவியல் வடிவமைப்பின் கருத்துருவின் பொருள் (Theme) – தொடர்பாக

பார்வை: இவ்வலுவலக கடித எண்: 1005 / அறிவியல் நகரம் / சென்னைஅறிவியல் விழா 2019 நாள் 11.12.2018

---

பார்வையில் கண்டுள்ள அறிவியல் நகர கடிதத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடம் இருந்து "சென்னை அறிவியல் விழா 2019" ல் பங்கேற்க அறிவியல் வடிவமைப்புக்கான கருத்துருக்கள் கோரப்பட்டு இருந்தன. இவ்வறிவியல் விழா "தமிழ்நாட்டின் மரபுசார் அறிவியல்" (Traditional Science of Tamilnadu) என்ற பொருளில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் மரபுவழி அறிவியல் என்பது பண்டைய தமிழக வேளாண்மை அறிவியல், நீர் மேலாண்மை, கட்டிட / கட்டுமான தொழில்நுட்பம், சிற்பத் தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு, சித்தா, வர்மம் உள்ளிட்ட மரபு மருத்துவம், கணக்கீடுகள் மற்றும் அதன் தொடர்பான வானவியல், தொல்பொருள் அறிவியல் மற்றும் அறிவுத்தளங்கள் பலவற்றிலும் நம் முன்னோர்களாகிய தமிழர்கள் உலகில் முன்னோடியாக இருந்துள்ளனர்.

V. Vij 26.12.18


தொலைபேசி: 044-24454054, 24454034, நிகரி: 044-24454054, மின்னஞ்சல்: scicity@dataone.in | scicitychennai@gmail.com
இணையதளம்: www.sciencecitychennai.in

# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்

சென்னை - 600 025.


இன்றைய நிலையில் நம் முன்னோர்களின் மண்– மரபு சார்ந்த அறிவியலை மீட்டு எடுப்பது காலத்தின் கட்டாயமாகவும் கடமையாகவும் உள்ளது. ஆதலால் நம் பண்டைய தமிழக அறிவியலின் சிறப்பினை வெளிக் கொணரும் வண்ணம், “சென்னைஅறிவியல் விழா **2019**” ல் நடைபெறும் அறிவியல் கண்காட்சிக்கான கருத்துருவினை “தமிழ்நாட்டின் மரபுசார் அறிவியல்” (Traditional Science of Tamilnadu) என்ற பொருளை ஒட்டி அனுப்பிட மாணாக்கர்களுக்கு அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

துணைத்தலைவர்


தொலைபேசி: 044-24454054, 24454034, நிகரி: 044-24454054, மின்னஞ்சல்: scicity@dataone.in,

இணையதளம்: www.sciencecitychennai.in